DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 47/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | வீரச்சாமி |
| ஊர் | : | தாணிகோட்டகம் | தாலுக்கா | : | வேதாரண்யம் |
| ஜாதி | : | -- | வயது | : | 47 |
| மதம் | : | -- | தொழில் | : | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.08.2026

**2ம் எதிரி இறப்பு. 1, 3 முதல் 8,11,12 எதிரிகள் ஆஜர். 9,10 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாணிகோட்டகம் கிராமத்தில் வசித்து வருகிறேன். டைல்ஸ் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகள், வராத எதிரிகள் கார்த்திக், வீரஎழிலன் என யாரையும் எனக்கு தெரியாது. சுமார் 10, 15 வருடங்களுக்கு முன்பு இரவு 10:00 மணிக்கு என் அக்காவின் வீட்டிற்கு செல்ல கத்திரிபுலத்திலிருந்து தாணிக்கோட்டகம் சென்று கொண்டு இருந்தேன். சாருமடை கடைத்தெருவில் போலீஸார் மறித்து என் விலாசம் கேட்டார்கள். என்னிடம் கையெழுத்து ஏதும் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் ( 1,3 முதல் 6 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் சாட்சியிடம் காட்டப்பட்டது) உள்ள கையொப்பம்

என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (கைப்பற்றுதல் மகஜர் சாட்சியிடம் காட்டப்பட்டது) உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீஸார் என்னை எங்கும் அழைத்து செல்லவில்லை. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலீஸார் என்னை விசாரித்தபோது 23.02.2007 அன்று போலீஸார் எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தபோதும், கடந்த 24.02.2007 அன்று போலீஸார் எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்துகளை கைப்பற்றிய போதும், சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பாற்ற மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை

3. **மறுவிசாரணை** – இல்லை.

ஒப்பம்/- செந்தில்குமார்

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.